**CNR No.TNVL1E-000437-2022**

**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12ம் நாள்)

**மேல்முறையீட்டு வழக்கு எண்.15/2022**

குணசேகரன்
த/பெ குள்ளி (எ) மாணிக்கம் ... மேல்முறையீட்டாளர்/ பிரதிவாதி

/ எதிர் /

குமார்
த/பெ குள்ளி (எ) மாணிக்கம் .... எதிர்மேல்முறையீட்டாளர் /வாதி

வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.84/2017 வழக்கில் கடந்த 17.02.2022ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு, தீர்ப்பாணை எதிராக பிரதிவாதியால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

// இடையே//

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

வாணியம்பாடி

**அசல் வழக்கு எண்.84/2017**

குமார்
த/பெ குள்ளி (எ) மாணிக்கம் ....... வாதி

/ எதிர் /

குணசேகரன்
த/பெ குள்ளி (எ) மாணிக்கம் .... பிரதிவாதி

மேல்முறையீட்டு வழக்கானது இறுதியாக, கடந்த 26.02.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.வி. வரதராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். திருப்பதி, அவர்கள் ஆஜராகியும், இதுநாள்

வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்துள்ள மேல்முறையீட்டு வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**தீர்ப்பு**

01) கடந்த 17.02.2022ம் தேதியில் வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.84/2017 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்பேரில் குறையுற்றுள்ள பிரதிவாதியால், மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேல்முறையீட்டு தீர்ப்பின் வசதிக்காகவும், மேல்முறையீட்டு தீர்ப்பினை எளிதாக புரிந்துகொள்ளும் பொருட்டும், மேல்முறையீட்டில் கண்டுள்ள தரப்பினர்கள், விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் கண்டுள்ள அதே தரப்பினர்களின் வரிசையின்படி, இம்மேல்முறையீட்டு தீர்ப்பில் விவரிக்கப்பட்டுள்ளனர்.

**03) அசல் வழக்கு எண்.84/2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:**

கடந்த 17.11.2008 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்படி, தாவா சொத்து, வாதிக்கு சொந்தமானதாக இருந்து, தாவா சொத்தில் வாதி அனுபவசுவாதீனத்தில் இருந்து வருகிறார். கடந்த 23.12.2010ம் தேதி தாவா சொத்தில் 9 சென்ட் நிலத்தை ஆனந்தன் என்பவருக்கு வாதி கிரையம் கொடுத்துள்ளார்.

வாதியின் சகோதரர் பிரதிவாதி ஆவார். தாவா சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்ய வேண்டுமென பல்வேறு வகைகளில்

வாதிக்கு, பிரதிவாதியால் தொந்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 08.02.2017 தேதியிட்ட மோசடியான கிரைய ஒப்பந்தத்தை பிரதிவாதி ஏற்படுத்திக்கொண்டு, தாவா சொத்தில், வாதியின் அனுபவசுவாதீனத்திற்கு இடையூறு செய்ய முயன்று வருகிறார்.

ஆகையால், தாவா சொத்தில், வாதியின் உரிமைமூலம் விளம்புகை செய்ய வேண்டியும், தாவா சொத்தில் வாதியின் அனுபவசுவாதீனத்தை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**04) அசல் வழக்கு எண்.84/2017ல் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

தாவா சொத்தில் வாதி ஏற்கனவே 9 சென்ட் சொத்தினை ஆனந்தன் என்பவருக்கு விற்றுள்ள நிலையில், மேற்படி ஆனந்தனை தரப்பினராக சேர்க்காமல், மேற்படி 9 சென்ட் சொத்தினையும் சேர்த்து, வாதி வழக்கு போட்டுள்ளது சட்டப்படி செல்லாது.

வாதியின் உடன்பிறந்த சகோதரர் பிரதிவாதி ஆவார். மேற்படி ஆனந்தனின் தகப்பனார் ராஜா என்பவர் வாதி, பிரதிவாதியின் மற்றொரு சகோதரர் ஆவார். வாதியின் தகப்பனாருக்கு சொந்தமான சொத்திற்கு அருகில் தாவா சொத்து அமைந்துள்ளது.

தாவா சொத்தினை வாதியும், பிரதிவாதியும், அவரது மற்றொரு சகோதரர் ராஜா என்பவரும் சேர்ந்து கிரையம் பெற ஏற்பாடுகள் செய்து,

அதன்படி, கடந்த 17.11.2008ல் தாவா சொத்து வாதி பெயருக்கு கிரையம் பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி, பிரதிவாதிக்கும், அவரது மற்றொரு சகோதரர் ராஜா என்பவருக்கும், தாவா சொத்தில், தலா 1/3 பாகத்தை வாதி கிரையம் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தாவா சொத்தின், மத்திய பகுதியை வாதி வைத்துக்கொள்வதாகவும், மேற்கில் உள்ள 1/3 பாகத்தை மூத்த சகோதரர் ராஜாவிற்கும், கிழக்கில் உள்ள 1/3 பாகத்தை பிரதிவாதிக்கும், ஒப்படைக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில், தாவா சொத்தில், 9 சென்ட் சொத்தினை மூத்த சகோதரர் ராஜாவின் மகன் ஆனந்தன் என்பவருக்கு வாதி கிரையம் கொடுத்துள்ளார். கடந்த 07.02.2017ம் தேதி தாவா சொத்தில் 10 சென்ட் நிலத்தை பிரதிவாதிக்கு ரூ.21,000/−த்திற்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, அதற்காக முன்பணமாக ரூ.10,000/−ஐ வாதி பெற்றுக்கொண்டு, பிரதிவாதி பெயருக்கு விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார்.

பின், கடந்த 01.04.2017ல் மேலும் முன்பணமாக ரூ.10,000/−ம் பிரதிவாதியிடமிருந்து, வாதி பெற்றுக்கொண்டு, அதுதொடர்பாக, கிரைய ஒப்பந்தத்தில் மேற்குறிப்பு செய்து, சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்திட்டுள்ளார். மேற்படி தேதியில், 10 சென்ட் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம் வாதி ஒப்படைத்துள்ளார்.

விற்கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், சொத்தினை கிரையம் செய்து கொடுக்க வாதி முன்வராத காரணத்தினால், கடந்த 10.05.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை வாதிக்கு, பிரதிவாதி அனுப்பியுள்ளார். அதனை பெற்றுக்கொண்டுள்ள வாதி, கடந்த 17.05.2017 தேதியிட்ட பொய்யான சங்கதிகள் அடங்கிய பதில்அறிவிப்பை அனுப்பியுள்ளார்.

வாதியால், பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள விற்கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், அ.வ.எண்.105/2017 என்ற வழக்கை வாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக இதே நீதிமன்றத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார்.

தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை. தாவாவிற்கான நீதிமன்ற கட்டணம் தவறானது. தாவாவில் சொத்து விவரம் தவறாக காட்டப்பட்டுள்ளது. ஆகையால், பொய்யான சங்கதிகளுடன் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**05)** வாதியால், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை போன்றவற்றை பரிசீலனை செய்தபின், தாவாவில் முடிவு காணவேண்டிய எழுவினாக்களை விசாரணை நீதிமன்றமான வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வனைந்துள்ளது.

**06)** பின் விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ள மேற்படி அசல் வழக்கு விசாரணையில், வாதி தரப்பில், மொத்தம் இரண்டு வாய்மொழி சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**07)** அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி மட்டும் வாய்மொழி சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக, விசாரணை நீதிமன்றத்தில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**08)** இருதரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்து, வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலனை

செய்தபின், அசல் வழக்கு எண்.84/2017ல் விசாரணை நீதிமன்றமான வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 17.02.2022ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

09) மேற்படி தீர்ப்பில் தாவா சொத்தில், மொத்தம் உள்ள 30 சென்ட் நிலத்தில், 21 சென்ட் நிலத்தை பொறுத்து வாதியின் உரிமைமூலம் விளம்புகை பரிகாரம் செய்யப்பட்டும், மேற்படி சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணை நீதிமன்ற தீர்ப்பு, தீர்ப்பாணையில் குறைவுற்றுள்ள பிரதிவாதியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10) மேல்முறையீட்டுக் காரணக் குறிப்பாணையின் சுருக்கம்:**

விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கு முரணானது. விசாரணை நீதிமன்றத்தில் முறையான எழுவினாக்கள் வனையப்படாமல், ஏற்கனவே வனையப்பட்டுள்ள எழுவினாக்களுக்கு சட்டத்திற்குட்பட்டு தீர்ப்பு கூறப்படவில்லை.

விசாரணை நீதிமன்றத்தில் தாவா சொத்து குறித்து வாதியால், பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள கடந்த 07.02.2017 தேதியிட்ட விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் உண்மையானது என முடிவு காணப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 10 சென்ட் சொத்தினையும் சேர்த்து, வாதிக்கு தாவா பரிகாரம் வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையது கிடையாது.

விசாரணை நீதிமன்றத்தில், வாதி தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் வாதி தரப்பு வழக்கினை நிரூபிக்க தவறியுள்ளதையும், பிரதிவாதி தரப்பில், முன்வைக்கப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் பிரதிவாதியின் எதிர்வாதத்தை நிரூபணம்

செய்துள்ளதையும், விசாரணை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொள்ள தவறியுள்ளது.

பிரதிவாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வாதுரை மற்றும் முன்தீர்ப்பு முடிவுகள் ஆகியவற்றை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்யாமல், வாதிக்கு ஆதரவாக வழக்கில் தீர்ப்பு பிறப்பித்துள்ளது. சட்டத்திற்கு புறம்பானதாகும்.

ஆகையால், வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.84/2017ல் , கடந்த 17.02.2022ம் தேதியில் பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, அசல் வழக்கினை தள்ளுபடி செய்து, மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** இம்மேல்முறையீட்டில் இருதரப்பிலும் கூடுதலாக எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் இம்மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**12)** இம்மேல்முறையீட்டில் இந்நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டியுள்ளது.

(i) தாவா சொத்தில் உள்ள 10 சென்ட் சொத்து தொடர்பாக வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கடந்த 07.02.2017 தேதியிட்ட விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் உண்மையானது என விசாரணை நீதிமன்றம் முடிவு கண்டுள்ள நிலையில், மேற்படி சொத்தினையும் சேர்த்து, வாதிக்கு தாவா பரிகாரங்களை வழங்கியுள்ளது. சட்டப்படி ஏற்புடையதா?

(iii) விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் கடந்த 17.02.2022ம் தேதி வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில்

இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் உள்ளதா?

(iv) இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

13) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு, மேல்முறையீட்டு வழக்கு தொடர்பான கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்துள்ளது. இருதரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களால் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரைகள் இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

<u>**14) மேல்முறையீட்டு வழக்கு பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு:**</u>

வாதியின் உடன்பிறந்த சகோதரர் பிரதிவாதி ஆவார். மேற்படி உறவுமுறையை பிரதிவாதி மறுக்கவில்லை. தாவா வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 30 சென்ட் சொத்து, கடந்த 17.11.2008 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் வாதிக்கு சொந்தமானது என வழக்கில் கூறப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், தாவா சொத்து, வாதிக்கு சொந்தமானது என்பதை பிரதிவாதி மறுக்கவில்லை. தாவா சொத்தில், 9 சென்ட் சொத்தினை கடந்த 23.12.2010 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் ஆனந்தன் என்பருக்கு வாதி கிரையம் கொடுத்துள்ளார் என வழக்கில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் எதுவும், வாதி வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சங்கதி உண்மை என ஒப்புக்கொண்டுள்ள பிரதிவாதி தரப்பில், அதன் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.7 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்தில், பி.சா.ஆ.7 கிரைய ஆவணத்தின்மூலம் ஆனந்தன் என்பவருக்கு, வாதியால், கிரையம் கொடுக்கப்பட்டுள்ள 9 சென்ட் சொத்தினை தவிர்த்து, மீதியுள்ள 21 சென்ட் சொத்தில் 10 சென்ட் சொத்தினை பிரதிவாதிக்கு ரூ.21,000/-த்திற்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ள வாதி, அதுதொடர்பாக, கடந்த 07.02.2017ம் தேதி பிரதிவாதியிடமிருந்து முன்பணமாக ரூ.10,000/-ம் பெற்றுக்கொண்டு, மேற்படி 10 சென்ட் சொத்து குறித்து, பிரதிவாதி பெயருக்கு விற்கிரைய ஒப்பந்தம் ஒன்றை வாதி எழுதிக்கொடுத்துள்ளார் என பிரதிவாதியால் வழக்கில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

பின்னர், கடந்த 01.04.2017ம் தேதி மேலும், கூடுதல் முன்பணமாக ரூ.10,000/-ஐ பிரதிவாதியிடமிருந்து பெற்றுக்கொண்ட வாதி, அதுதொடர்பாக, விற்கிரைய ஒப்பந்தத்தில், மேற்குறிப்பு செய்து கையெழுத்திட்டு கொடுத்துள்ளதாக பிரதிவாதியால் எதிர்வழக்காடப்பட்டுள்ளது. விற்கிரைய ஒப்பந்தம் தொடர்பாக வாதிக்கு எதிராக பிரதிவாதியால் அ.வ.எண். 105/2017 என்ற வழக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விற்கிரைய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்தம் மோசடியானது என வாதி தரப்பில் வழக்காடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது என வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள வாதி குமார் தன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.105/2017 என்ற வழக்கில் பி.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்தம் உண்மையானது என

விசாரணை நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பிரதிவாதிக்கு கிடைக்க முடியாது என்றும், மாற்றுமுறை பரிகாரமாக முன்பணத் தொகையை பின்வட்டியுடன் பிரதிவாதிக்கு வாதி, திருப்பி தரவேண்டுமென்றும், கடந்த 17.02.2022ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுள்ள பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தை வாதி தரப்பில் மறுக்கவில்லை.

தாவா சொத்தில், உள்ள 30 சென்ட் சொத்திற்கான வாதியின் சட்டப்படியான உரிமைமூலம் வா.சா.ஆ.1 கிரையஆவணத்தின்மூலம் வாதி தரப்பில் இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளது. பி.சா.ஆ.7 கிரைய ஆவணத்தின்மூலம் ஆனந்தன் என்பவருக்கு தாவா சொத்தில் 9 சென்ட் சொத்தினை வாதி கிரையம் கொடுத்துள்ள நிலையில், தாவா சொத்தில் வாதிக்கு 21 சென்ட் விஸ்தீரணத்திற்கு மட்டும் சட்டப்படியாக உரிமை உள்ளது என்ற விசாரணை நீதிமன்ற முடிவு சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

தாவா சொத்தில் 21 சென்ட் சொத்திற்கு வாதிக்கு சட்டப்படியாக உரிமை உள்ளது என பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள காரணத்தினால் மட்டுமே மேற்படி சொத்தில், 10 சென்ட் சொத்திற்காக வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில், பி.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில், பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.105/2017 வழக்கில் ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தை வழங்க மறுத்து விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 விற்கிரைய ஒப்பந்தம் உண்மையானது என்ற காரணத்திற்காக மட்டும், பி.சா.ஆ.1 ஆவணத்தின்மூலம் தாவா சொத்தில் உள்ள 10 சென்ட் சொத்திற்கு பிரதிவாதிக்கு சட்டப்படியாக

உரிமைமூலமும், அனுபவசுவாதீனமும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இச்சூழ்நிலையில், தாவா சொத்தில் உள்ள 21 சென்ட் சொத்தினை பொறுத்து வாதியின் உரிமைமூலம் பரிகாரம் வழங்கியும், மேற்படி சொத்து தொடர்பாக பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், விசாரணை நீதிமன்றம், தீர்ப்பு பிறப்பித்துள்ளதில், சட்டப்படியாக எந்தவொரு தவறும் இல்லை என இம்மேல்முறை நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, மேல்முறையீட்டு பிரச்சனை எண்.1 விடை காணப்படுகிறது.

**15) <u>மேல்முறையீட்டு வழக்கு பிரச்சினை எண்.2 மற்றும் 3ற்க்கான தீர்</u>**வு:

விசாரணை நீதிமன்றத்தில், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டப்படியான காரணங்களுக்கு உட்பட்டது என ஏற்கனவே இந்நீதிமன்றம் மேற்கண்ட பிரச்சனை எண்.1ல் முடிவு கண்டுள்ள நிலையில், விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், அதன் அடிப்படையில், மேல்முறையீடு அனுமதிக்க வேண்டிய சட்டப்படியான தேவை இல்லை என்றும் இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு கண்டு, மேற்கண்ட பிரச்சனை எண்.2 மற்றும் 3 ஆகியவற்றிற்கு தீர்வு காணப்படுகிறது.

**16) முடிவில்,** இம்மேல்முறையீடு தள்ளுபடிசெய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றமான வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண்.84/2017 வழக்கில், கடந்த 17.02.2022ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு, தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.26 16:16:23 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

<u>குறிப்பு : –</u>

தீர்ப்பு நகல் விசாரணை நீதிமன்றமான
வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு
அனுப்பப்படுகிறது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.26 16:16:29 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.